

அம்பிகா ஜுவலர்ஸ்

77, செட்டியார் தெரு, கொழும்பு-11.

தொலைபேசி 422839 434238



அரசில் செய்தி இதழாக பதிவு பெற்றது

# தினபதி

ரூ 3/50

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல 6535 1990 மார்ச் 10 சனிக்கிழமை ★ ★ ★ දිනපති



தூயமான 22 கரட் தங்க வைர நகைகளுக்கு நம்பிக்கையான ஸ்தாபனம்

Ambiga JEWELLERS (PTE) LIMITED

SEA STREET, COLOMBO-11.

Phone: 422839 434238


இந்தியப் படை முற்றாக விலகியதும்

# வடக்கு கிழக்கில் இலங்கை இராணுவம் ரோந்து

## புதிதாகப் படையினர் அனுப்பப்படமாட்டார்கள்

### பொலீஸ் நிலையங்கள் திறக்கப்படும்

கொழும்பு, மார்ச் 9

வடக்கு — கிழக்கிலிருந்து இந்தியப் படை முற்றாக விலகியதும் அங்கே இப்போதிருக்கும் இலங்கை இராணுவத்தினர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவர். புதிதாகப் படையினர் அனுப்பப்பட மாட்டார்கள்.

மேற்கண்டவாறு சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடக்கு — கிழக்கில் புதிதாகப் பல பொலீஸ் நிலையங்களும் திறக்கப்படவுள்ளன என்று பொலீஸ் உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தியப் படையினர் வெளியேறியதும வடக்கு — கிழக்கில் இலங்கைப் பாதுகாப்புப் படைகளும, விடுதலைப் புலிகளும மோதிக் கொள்ளக் கூடாது எனபதில் இரு தரப்பாரும அக்கறை கொண்டுள்ளனர்.

இதன் பொருட்டு புலிகளின் அரசியல் ஆலோசகர் டாக்டர் அன்டன் பாலசிங்கம தலைமையிலான புலிகளின் தூதுக்குழு ஒன்று அரசாங்க தூதுக்குழுவோடு பேச்சுவார்த்தைகள் நடத்தியது.

இரு தரப்பு மோதலைத் தவிர்க்கும திட்டங்கள் குறித்து இப்பேச்சுவார்த்தைகளின் போது ஆராயப்பட்டது என்றும விடுதலைப் புலிகளின் உத்தியோகப் பற்றற்ற பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

## இலங்கை இந்திய திரைப்பட விழா 23இல் கொழும்பில் ஆரம்பம்

கொழும்பு, மார்ச்— 9

சத்யஜித்ரேயின் ஜல்சாகர் ...

சோமண்ணை



தடுத்துவைச்சது சரி பாருங்கோ, அங்கையிருந்து அது ஆவியாகப் போகாமல் இருக்கவேணுமே!

## சர்வதேச மகளிர் தினம்: ஜ.தொ.கா. கொண்டாட்டம்

கொழும்பு, மார்ச் 9

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஜ தொ கா மாதர் அணியினரால் தெமட்டகொடை ஸை எம எ மாநாட்டு கேட்போர் கூடத்தில் இன்று மகளிர் தினம கொண்டாடப் ...

## லொறியை மறித்துகொள்ளை

திருகோணமலை மார்ச் 9

திருகோணமலை, மட்டிக்குளி பகுதியில் லொறி ஒன்று ஆயுதம தாங்கிய கோஷ்டி ஒன்றினால் வழி மறிக்கப்பட்டு 60 ஆயிரம ரூபா கொள்ளையிடப்பட்டது.

இன்று காலை (வெள்ளி) இந்த சமபவம நடந்தது.

கொழுமபில் இருந்து வந்த லொறியே கொள்ளையிடப்பட்டது.

(உ-மு-288)

## 12ஆம் திகதி புனித பராஅத் இரவு

கொழும்பு, மார்ச்— 9

புனித "பராஅத்" இரவை முஸ்லிமகள் எதிர்வரும் 12 ஆம திகதியன்று மாலை அனுஷ்டிப்பர்.

கொழும்பு பெரிய பள்ளிவாசலில் கூடிய ஒரு விசேட மாநாட்

(4ஆம பக்கம பார்க்க)

## தொலைபேசிக் கட்டணக் காசோலை பற்றி அறிவித்தல்

கொழும்பு, மார்ச்— 8

தொலைபேசி கட்டணங்களுக்கான காசோலைகளை ஏற்றுக் கொள்வது தொடர்பாக தபால் தொலைத்தொடர்பு அமைச்சு விசேட அறிவித்தல் ஒன்றை எல்லா வங்கிகளுக்கும விடுத்துள்ளது.

தொலைபேசி கட்டணங்களுக்கான காசோலைகளில் மத்திய வங்கியின் பெயரில் "குறொஸ்" செய்யப்பட்டு வங்கிக் கணக்கு இல 1, வங்கிக் கணக்கு இல 267 என்று எழுதப்பட்டிருந்தாலும அவற்றை ஏற்றுக் கொள்ளுமபடி கேட்கப்பட்டுள்ளது.

(இ-032)

## திருமலையில் 2 இடங்களிலிருந்து இந். படை விலகல்

திருகோணமலை, மார்ச் 8

சீனக்குடா துறைமுக அதிகார சபைப் பகுதியில் இருந்தும, நகரில் உள்ள சிங்கள மகா வித்தியாலயத்தில் இருந்தும இந்தியப் படையினர் நேற்று வெளியேறினர்.

சீனக்குடா துறைமுக பகுதி பாதுகாப்புப் பொறுப்புகளை இலங்கை கடற்படையினரும, மகா வித்தியாலய பொறுப்பை பொலீஸாரும ஏற்றுக் கொண்டனர்.

இதேவேளையில் இந்தியப் படையினரை ஏற்றிச் செல்வதற்காக நான்கு கப்பல்கள் திருகோணமலையை வந்தடைந்துள்ளன.

ஜல சமுத்திரா என்ற கப்பல் தாங்கிகள் மற்றும் கனரக வாகனங்களை ஏற்றிச் செல்லும, ஏனைய மூன்று கப்பல்களிலும ஜவான்கள் செல்வார்கள்.

(மு-288)

ரூ. 60 லட்சம் பெறுமதியான

## இறக்குமதி விஸ்கி சுங்கப் பகுதி தடுத்து வைத்திருக்கிறது

கொழும்பு, மார்ச் 9

சட்ட விரோதமாக இறக்குமதி செய்யப்பட்டதாக கூறப்படும விஸ்கி போத்தல்கள் அடங்கிய இரண்டு கொள்கலன்களை சுங்கப் பகுதி ... உள்ள விஸ்கி போத்தல்களின் பெறுமதி 60 லட்சம ரூபா எனவும அவர் மேலும தெரிவித்தார்.

(உ-மு)

இணக்க சபைகளில்

கொழும்பு, மார்ச்— 9

இலங்கை - இந்திய உறவை பலப்படுத்தும் விதத்தில் இந்திய அரசும் இலங்கை திரைப் படக் கூட்டுத்தாபனமும் இணைந்து திரைப்பட விழாக் களை நடத்த இருக்கின்றன முதலாவது விழா எதிர்வரும் 23ஆம திகதி முதல் ஒரு வார காலத்துக்கு கொழும்பு லிபர்ட்டி சினிமாவில் நடைபெறும

இந்தத் தகவலை தகவல் ராஜாங்க அமைச்சர் திரு ஏ ஜே ரணசிங்க தெரிவித்தார்— இது தொடர்பாக அவர் நேற்றுதனது அமைச்சில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்று நடத்தினார்—

அமைச்சர் கூறியதாவது:—

எமது ரசிகர்கள் 1930லிருந்தே இந்தியத் திரைப் படங்களை விரும்பி வந்துள்ளார்கள்—

திரைப்பட விழாவில் முதலாவதாக சத்யஜித்ரேயின் படங்களை திரையிடவிருக்கிறோம

சத்யஜித்ரேயின் ஜல்சாகர் ஹிரோக் ராஜார் தேஷி, பராஷ் பத்தர், அரன்யர் தின் ராத்ரி, பிரடிட்வான்டி ஆகிய ஐந்து படங்கள் திரையிடப்படவிருக்கின்றன—

திரைப்பட விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகளில் பிரதமர் டி பி விஜே

(2 ஆம பக்கம பார்க்க)

குறிப்பிட்டார்.

இதே சமயம விடுதலைப் புலிகளுடன் நடத்தப்பட்ட பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் இலங்கை இராணுவம, பொலீஸாருடன் இணைந்து மட்டக்களப்பில் இரவு நேர ரோந்தை ஆரமபித்துள்ளனர்.

(உ-032)

விர் தினம கொண்டாடப் படுகிறது,

இன்று காலை 10-30 மணிக்கு ஆரம்பமாகும இவ்விழாவில் பிரதம விருந்தினராக ஆஸ்திரேலிய தூதுவர் திருமதி டோனியா சான்ட் கலந்துகொள்

(4ஆம பக்கம பார்க்க)

கலன்களை சுங்கப் பகுதியினர் கைப்பற்றி உள்ளனர்.

இதற்கு முன்னரும இவ்வாறு சட்டவிரோதமாக நாட்டிற்குள் கொண்டுவரப்பட்ட இரண்டு கொள்கலன்கள் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக பிரதம சுங்க சேகரிப்பாளர் திரு லலித் ஹன்தும தெரிவித்தார்,

வெளிநாட்டைச் சேர்ந்த இரண்டு நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்பட்டுள்ள இந்த நான்கு கொள்கலன்களிலும

# ஆயுதம் இருக்கக் கூடாது

## வீடுகள், விடுதிகள், ஹோட்டல்களின் உரிமையாளர்களுக்கு அரசு எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 9

தங்கும விடுதிகள், உணவு விடுதிகள், ஹோட்டல்கள் ஆகியவற்றில் ஆயுதங்கள் இருப்பது கண்டுபிடிக்கப் பட்டால் விடுதிகள் மற்றும் ஹோட்டல்களின் உரிமையாளர்கள் கைது செய்யப்படுவார்கள்.

வெளியார் எவரும வீடுகளில் தங்கியிருக்கும போது அங்கு ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அந்த வீடுகளின் உரிமையாளர்கள் கைது செய்யப்படுவர்.

அரசு நேற்று இந்த எச்சரிக்கையை விடுத்தது.

இது தொடர்பாக யாழ்ப்பாண ராஜாங்க அமைச்சரும, வெளிவிவகார அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன நேற்றுப் பிற்பகல் நாடாளுமன்றத்தில் உள்ளூர் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்,

நாட்டு மக்கள் மிகவும விழிப்பாகவும, எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும என்று அவர் தெரிவித்தார்.

சட்ட விரோத தமிழ்த் தேசிய இராணுவத்தோடு இணைந்து ஈ என் டி எல் எப் கொலைகளையும, கொள்ளைகளையும மேற்கொண்டு நாட்டைச் சீர்குலைக்க முனைந்துள்ளது.

இத்திட்டத்தைப் பொலீஸார் வெளிப்படுத்தி இருக்கின்றனர் என அவர் விவரித்தார்,

நுவரெலியாவில் பல கடைகளின் உரிமையாளர்களை அச்சுறுத்தி நாராயணன் விஜயபாலனும் அவரது குழுவினரும கொள்ளையடித்துள்ளனர்.

கொள்ளையடித்த இந்த நபர்கள் தப்பிச் செல்ல முனைந்த போது எதிரே வந்த ஒருவர் இவர்களால் சுடப்பட்டார், அவர் பாரதூரமான காயங்களுக்கு உள்ளாகி இருக்கிறார்,

பொலீஸாரின் தீவிர முயற்சியால் விஜயபாலன் கைது செய்யப்

( ஆம பக்கம பார்க்க)

# 3 வயது குழந்தை மஸ்கெட்தாச்சியில் விழுந்து மரணம்

கொழும்பு, மார்ச் 9

வீட்டில் உள்ளவர்கள் மஸ்கு— தயாரித்துக் கொண்டிருந்த சமயம் மூன்று வயதுக் குழந்தை ஒன்று எண்ணெய்த் தாச்சியில் தற்செயலாக விழுந்து துடிதுடித்து மாண்டது.

அம்பலாந்தோட்டை பொலீஸ் பிரிவிலுள்ள ஜல்பல்லம என்ற கிராமத்தில் இச்சமபவம நடந்தது.

எஸ் நிதிஸ் ஷதுரங்க (வயது 3) என்ற குழந்தையே இவ்வாறு

(4ஆம பக்கம பார்க்க)

இணக்க சபைகளில்

# ஆங்கில மொழி ஆதிக்கமும் அரசியல் நிர்ப்பந்தமும வேண்டாம்

— நவரத்தினம் எம். பி

கொழும்பு, மார்ச் 9

இணக்கச் சபைகளில் ஆங்கில மொழி ஆதிக்கமோ, அரசியல் நிர்ப்பந்தங்களோ ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும.

யாழ் த வி கூட்டணி எம பி திரு கே நவரத்தினம இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் கூறினார்,

இணக்க சபைகள் சட்டத்தின் ஒத்திவைக்கப்பட்ட விவாதம நேற்று நடந்த போது திரு நவரத்தினம எம பி அதில் கலந்து கொண்டு பேசினார்.

"நீதிமன்றங்களே இன்று இயங்க முடியாமல் செயலற்று இருக்கின்றபோது இணக்கச் சபைகள் எப்படி இயங்கப் போகின்றன என்பது சந்தேகமாக இருக்கின்றது" என்று அவர் கூறினார். அவர் மேலும் பேசியதாவது—

"இணக்கச்சபைகளுக்கு தெரிவு செய்யப்படுபவர்கள் அந்தந்த பிரதேசங்களில் நன்மதிப்பைப் பெற்றவர்களாக இருக்க வேண்டும. அவர்களின் தீர்ப்புகளையே மக்கள் ஏற்றுக் கொள்வர்.

ஆங்கிலம தெரிந்தவர்களை இச் சபைகளுக்குள் திணித்து விடுவதால் அவர்களை எல்லோரும அறிவாளிகள் என்று கொள்ளக் கூடாது, அதே நேரம தமிழ், அல்லது சிங்களம் மட்டும தெரிந்தவர்கள் அறிவிலிகள் என்று அவர்களைப் புறக்கணித்து விடவும் கூடாது,

(2ஆம பக்கம பார்க்க)

# தமிழ்நாடு இந்திரா காங். தலைவர் மற்றும் 3500 பேர் கைது!

சென்னை மார்ச் 9

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சி தலைவர் திரு வாழப்பாடி ராமமூர்த்தி நேற்றுக் காலை மதுரையில வைத்து பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார்—

மோசடிக் குற்றச்சாட்டு ஒன்றின் பேரிலேயே இவர் கைது செய்யப்பட்டு சேலத்தில் காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்று காவல்துறை வட்டாரங்கள் தெரிவித்தன என்று அகில இந்திய வானொலி அறிவித்தது—

இதேவேளை தமிழ்நாட்டில் நேற்று மாலை ரயில் நிறுத்த மறியல் போராட்டம ஒன்றை நடத்த திட்டமிட்டிருந்த இந்திரா காங்கிரஸ் கட்சித்தொண்டர்களில் 3500 க்கும அதிகமானோர் முன் எச்சரிக்கையாக நேற்று பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்—

தமிழ்நாடு மறை மாவட்டத்திலுள்ள ரயில் நிலையம ஒன்றுக்கு காமராஜரின் பெயரை சூட்டுமாறு இந்திரா காங்கிரஸ் கட்சியினர் அரசைக் கோரினர்—

அரசு இந்த கோரிக்கையை நிராகரித்து விட்டது—

இதனையடுத்தே இந்திரா காங்கிரஸ் கட்சியினர் ரயில் மறியல் போராட்டம நடத்த முனைந்தனர்—

இப்படி அகில இந்திய வானொலி நேற்று அறிவித்தது—

(உ-வ)

"ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

# வாழ்க்கைச் செலவைக் குறைக்க பெண்களும் உதவலாம்

## சர்வதேச மகளிர் தின விழாவில் ஜனாதிபதி

கொழும்பு மார்ச் 9

நாம் இப்பொழுது எதிர் நோக்கி இருக்கும் வாழ்க்கைச் செலவைக் குறைக்க பெண்களும் உதவலாம்.

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச இவ்வாறு கூறினார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சுண்டிக்குளி போகம்பறை மைதானத்தில் நடைபெற்ற விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசும் பொழுதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு ஜனாதிபதி தொடர்ந்து கூறியதாவது:

பெண்களுக்கு தெய்வீகத் தன்மையைப் பெறக் கூடிய சக்தி உண்டு.

எனவே பெண்கள் தமது அந்தஸ்த்துக்கு ஏற்ப எழுச்சி பெற வேண்டியது அவசியமாகும்.

தற்போது முப்படைகளிலும் நீதிமன்றம் உட்பட அரச நிர்வாகங்களிலும் பெண்களுக்கு உரிய இடம் வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜயவர்த்தனா படைகளில் யுவதிகளை இணைத்துக் கொண்டதன் மூலம் அவர்களுக்கு மதிப்பளிக்கப்பட்டுள்ளது.

சமூகத்தில் சுகாதாரமும் பாதுகாப்பும் வாழ்க்கைச் செலவின் கட்டுப்பாடும் தேசிய உற்பத்தியும் பாலர் கல்வி அபிவிருத்தியும் பெண்களின் கையில்தான் தங்கியுள்ளது என்றார்.

இலங்கை வனிதா அமைப்பின் தலைவியான திருமதி ஹேமா பிரேமதாச பேசுகையில் கூறியதாவது:

"சமூக ரீதியில் பல அபிவிருத்தித் திட்டங்களில் ஈடுபாடு கொள்ளவும் சிரமதான பணிகளில் தம்மை இணைத்துக் கொள்ளவும் மாதர்களுக்குச் சிறந்த ஆற்றல்கள் உண்டு.

எமது அமைப்பு சுதந்திர வர்த்தக வலயத்தில் பணிபுரியும் யுவதிகளுக்கு விடுதிகளை அமைத்துக் கொடுக்க உறுதி பூண்டுள்ளது.

இதன் பொருட்டு பலரும் நிதி உதவி வழங்கியுள்ளார்கள் என்றார்.

இந்த வைபவத்தில் சுகாதார மகளிர் விவகார அமைச்சர் திருமதி ரேணுகா ஹேரத் மத்திய மாகாண முதலமைச்சர் திரு டபிள்யூ பீ பீ திஸாநாயக்க, மத்திய மாகாண அமைச்சர் திரு பத்மகீர்த்தி ஹேமச்சந்திரா ஆகியோரும் பேசினார்கள்.

கிராம அபிவிருத்தி புடைவைக் கைத்தொழில் அமைச்சர் திரு எஸ் தொண்டமான் மத்திய மாகாண ஆளுநர் திரு பீ விஜேபுலான மத்திய மாகாண அமைச்சர்களான ஜனாப் எம் எச் எ ஹலீம், திரு எஸ் கே இராமநாதன் உட்பட மற்றும் பல [illegible] கலந்து கொண்டனர். (இ-017$

## தொழிலாளர் தேசிய சங்க மகளிர் தின விழா

கொழும்பு, மார்ச் 9

தொழிலாளர் தேசிய சங்கம் சர்வதேச மகளிர் தின விழாவை இன்று (சனிக்கிழமை) காலை 10-00 மணிக்கு அட்டனில் கொண்டாடவிருக்கிறது.

அட்டன் மாநிலக் காரியாலயத்தில் அமைந்துள்ள அமரர் வி கே வெள்ளையன் ஞாபகார்த்த வாசிகசாலை மண்டபத்தில் இவ் விழா நடைபெறும்.

இவ் விழாவில் மலையக மக்களின் சமூகப் பொருளாதார அரசியல் உரிமைகளை வென்றெடுக்கும் வகையில் புதிய வேலைத் திட்டம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்து வைக்க சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

இதனை தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர் திரு டி அய்யாக்கண்ணு மகளிர் தின விழா தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (இ)

## பேதங்களை பாராது உரிமைகளை பாதுகாக்க முன் வரவும்

### மகளிர் தினக்கூட்டத்தில் சிறிமா

கொழும்பு மார்ச் 9

கட்சி பேதங்களை பாராது மனித உரிமைகளை பாதுகாக்க சகலரும் முன்வர வேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயக்கா இப்படிக் கூறினார்.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் மகளிர் சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச மகளிர் தினக் கூட்டம் ஸ்ரீ ல சு கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

திருமதி பண்டாரநாயக்கா இங்கு மேலும் கூறியதாவது:

"30 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைப் பெண்கள் கல்வி அறிவைப் பெற முன்வரவில்லை ஆனால் இன்று படித்த பெண்கள் எமது சமூகத்தில் இருக்கிறார்கள்.

இன்று கணவனும் மனைவியும் சேர்ந்து உழைத்தால் அன்றி குடும்பத்தை நடத்த முடியாது.

ஆண்களைப் போலல்லாது பெண்கள் தொழிலுக்கு புறம்பாக வீட்டு வேலைகளிலும் ஈடுபட வேண்டியுள்ளது.

இலங்கையில் உழைக்கும் மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் பெண்களாவர். ஆனால் உயர் பதவிகளை மிகச் சிலரே வகிக்கி[ன்றனர்] ... போக்க வேண்டும்.

1960 ஆம் ஆண்டு பெண்கள் நாட்டை ஆள முடியும் என்பதை இலங்கை மக்கள் கண்டனர்.

பெண்களுக்கு சமூகத்தில் உரிய இடத்தை கொடுக்க ஆண்கள் முன்வர வேண்டும்.

லொத்தர் சீட்டுகளை விற்றோ அல்லது சுவர்களில் விளம்பரங்களை ஒட்டியோ மகளிர் தினத்தை கொண்டாடுவதில் பயன் இல்லை.

இன்று நாட்டில் ஆண்களுக்கும் அச்சமின்றி வாழக் கூடிய நிலை இல்லை.

இந்த நிலைமையை போக்க மனித உரிமைகளை பாதுகாக்க சகலரும் முன்வர வேண்டும்"

இப்படி அவர் கூறினார்.

சமசமாஜக் கட்சியின் மகளிர் அணித் தலைவி திருமதி விவியன் குணவர்த்தனா, கம்யூனிஸ்ட் கட்சியின் மகளிர் பிரிவுத் தலைவி திருமதி நந்தா டி சில்வா ஆகியோரும் இங்கு உரையாற்றினர். (இ-ற)

## ஆங்கில...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவே அரசியல் நிர்ப்பந்தங்களோ மொழி ஆதிக்கங்களோ ஏற்படாமல் சரியான முறையில் இணக்க சபைகளை இயங்கச் செய்ய வேண்டும்".

இவ்வாறு நவரத்தினம் எம் பி கூறினார்,

மட்டக்களப்பு மாவட்ட த வி கூட்டணி எம் பி திரு சாம் தம்பிமுத்து பேசுகையில்,

"இணக்கச் சபைகளை வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமைப்பது மிகவும் நல்லது. அடிமட்டத்தில் இருந்து நல்லொழுக்கம் உள்ள ஒரு சமுதாயத்தை உருவாக்க அவை உதவியாக இருக்கும்" என்றார்,

"சில பிரச்சினைகளுக்கு சரியான தீர்ப்புகள் வழங்க முயல் இன்றபோது சட்டங்கள் குறுக்கிடுகின்றன. இணக்க சபைகள் இப்படியான சிக்கல்களைத் தீர்த்து வைக்கும், கட்சி வேறுபாடின்றி இதனை செயற்படுத்துவது அவசியம்" என்றும் அவர் கூறினார், (உ-கு)

## ஆயுதம் இருக்க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டார்.

விஜயபாலன் பொலீஸாருக்குக் கொடுத்த தகவலில், தான் தமிழ் தேசிய இராணுவத்தைச் சேர்ந்தவர் என தெரிவித்திருக்கிறார். இவர் வவுனியா செட்டிகுளத்தைச் சேர்ந்தவர்.

இவர்கள் சிறு குழுக்களாக ஈ என் டி எல் எப் இயக்கத்தின் ஆதரவுடன் கொலை, கொள்ளைகளில் ஈடுபட்டு நாட்டை சீர்குலைக்க முனைந்துள்ளனர் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

எனவே தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள், ஹோட்டல் உரிமையாளர்கள் உட்பட தனிப்பட்ட வீட்டு உரிமையாளர்களும் விழிப்பாக இருக்க வேண்டும். வெளியாரைத் தங்க அனுமதிக்கும் போது பாதுகாப்பு பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.

பொலீஸார் திடீர் பரிசோதனை நடத்தி ஆயுதங்கள் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டால், உரிமையாளர்களே கைது செய்யப்படுவர் என்றும் அமைச்சர் திரு விஜேரத்ன எச்சரித்தார்.

பொலீஸார் நாட்டின் சட்டத்திற்கு அமைய 24 மணித்தியாலமும் திடீர் பரிசோதனைகளை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர். இரவு நேரங்களில் தேடுதல் மற்றும் பரிசோதனைகளில் ஈடுபட இராணுவத்தினர் அனுமதிக்கப்படவில்லை என்றும் அவர் சொன்னார். (உ-ங)

## விகிதாசார ஆட்சேர்ப்பை உறுதி செய்ய மீளாய்வு சபை தேவை

### உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் சிபார்சு

கொழும்பு, மார்ச் 9

தேசிய ரீதியிலும், மாகாண ரீதியிலும், மாவட்ட ரீதியிலும், இன விகிதாசாரப்படியும், திறமையின் அடிப்படையிலும் அரசாங்க சேவையில் ஆட்களை சேர்த்துக் கொள்ள வேண்டும்.

இதனை உறுதி செய்யும் வகையில் நியமன அதிகாரிகள் மீளாய்வுச் சபைகளை அமைக்க[…]

சில விசேட சந்தர்ப்பங்களில் இன விகிதாசாரம் பேணப்படமாட்டாது. இன விகிதாசாரப்படி வழங்குவதற்கு போதிய நியமனங்கள் இல்லாத சந்தர்ப்பங்களில் திறமை அடிப்படையில் ஆட்சேர்ப்பு நடைபெறும்.

வெற்றிடங்களுக்கான அறிவித்தல்களை ஒரு வருடத்திற்கு முன்னரே பகிரங்கப்படுத்த வேண்டும்.

ஆட்சேர்ப்புக்காக நடத்தப்படவிருக்கும் பரீட்சைகள், சம்பந்தப்பட்ட பரீட்சை நிறுவனங்கள், பாடநெறி ஆகியவற்றையும் அவ்வாறே அறிவிக்க வேண்டும்.

இப்படி அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-ற)

## வவுனியாவில் சிமெந்து உறை கொள்ளை

கொழும்பு, மார்ச் 9

வவுனியா, நவகமுவ என்னுமிடத்தில் ஆயுதம் தாங்கிய 6 இளைஞர்கள் 150 சிமெந்து உறைகளை லொறியொன்றிலிருந்து கொள்ளையடித்துள்ளனர்.

இப்படி அரசு விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ள மேலும் பல சம்பவங்கள் பின்வருமாறு:

அட்டாளை மொரகஸ்ஸ என்னுமிடத்தில் இனம்தெரியாத ஆயுத கோஷ்டி ஒன்று 48,000 பெறுமதியான நகைகளையும் பணத்தையும் கொள்ளையடித்துள்ளது.

அனுராதபுரம், ஸ்ரீடோகம என்னுமிடத்தில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட ஆறு கிரேனைட்ஸ் குண்டுகளை பாதுகாப்புப் படையினர் கைப்பற்றினார்கள். (இ-455)

## இலங்கை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துங்க பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார் வெளிநாட்டு […]

கலாசார பிரிவு இரண்டாவது செயலாளர் திரு எம் பி சிங், தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன […]

மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் பெண்களாவர்- ஆனால் உயர் பதவிகளை மிகச் சிலரே வகிக்கி றார்கள்-

உயர் பதவிகளை வகிக்க பெண்களால் முடியுமா என்ற ஆண்களின் சந்தேகத்தை

## "அத்த" பத்திரிகை மீதான வழக்கு

கொழும்பு, மார்ச்- 9

அமைச்சர் லலித் அத்துலத் முதலி மானநஷ்டஈடு கோரி "அத்த" பத்திரிகையின் மீது தாக்கல் செய்துள்ள வழக்கு எதிர்வரும் 14ஆம் திகதி மீண் டும விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும-

இவ் வழக்கை மேல் நீதிமன் றம பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இரு தரப்பு சட்டத்தரணிகளின் இணக் கத்தின் பேரில் விசாரணைக் கான திகதி குறிக்கப்பட்டது-

(இ-032)


## தினபதி
## சிறு விளம்பரம்

காணி விற்பனைக்கு

பேராதனைக்கு அண்மையில் மின்சாரம, நீர், போக்குவரத்து வசதிகளுடனான முஸ்லீமகள் அதி கமாக வாழும பாதுகாப்பான பகு தியில் வீடு கட்டுவதற்கு காணித் துண்டுகள் விற்பனைக்குண்டு- பர்ச் விலை 1000/- முதல் 4000/- வரை சலுகைகள் உண்டு- விபரங்களு க்கு சட்டத்தரணி, அபூசாலி, 6. கொழும்பு வீதி, கண்டி- போன்- 23132-

031685


இதனை உறுதி செய்யும வகையில் நியமன அதிகாரிகள் மீளாய்வுச் சபைகளை அமைக்க வேண்டும.

இன விகிதாசாரம, திறமை ஆகியவற்றின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு பணிகளை கண் காணிக்க குழுவொன்று அமைக் கப்படும.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு இக் குழுவை அமைக்கும.

அரசாங்க சேவை தொடர் பாக பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு யூ பி விஜேகோன் அண்மையில் அமைச்சரவையில் சமர்ப்பித்த அறிக்கையில் இவ்வாறு சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

அரசாங்க சேவை நியமனங்க ளில் அரசியல் தலையீடு இருக்கக் கூடாது என்றும அந்த அறிக்கை யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலிகிதர் சேவைக்கு குறைந்த பதவிகளுக்கு மாவட்ட மட்டத் திலேயே ஆட்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

அந்தப் பதவிகளைப் பெறுவ தற்கு ஒரு மாவட்டத்தில் அதற் குரிய விகிதாசாரப்படி அங்கு வெற்றிடங்கள் இல்லா விட்டால் அருகனை அடுத்துள்ள மாவட்டங் களிடையே அந்தப் பதவிகள் பகிர்ந்தளிக்கப்படும.

இந்த வருடம ஜனவரி மாதம 1ஆம திகதி முதல் அமுலாகும வகையில் சகல பதவி உயர்வு களும இன விகிதாசாரப்படியே வழங்கப்படும.

ஆனால் கடந்த ஆண்டுகளில் ஏற்பட்ட வெற்றிடங்களுக்காக ஏற்கனவே வழங்கப்பட்ட பதவி உயர்வுகளை இது பாதிக்காது.

ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள பணிப்புரைகளின்படி அரசாங்க சேவையிலும, உள்ளூராட்சி சேவையிலும உள்ள அதிகாரிகள் மாகாண அரசாங்க சேவையில் சேர்க்கக் கொள்ளப்பட்ட பின் னரே மாகாண சேவைக்கு புதிய நியமனங்கள் வழங்கப்படும.

வெற்றிடங்களுக்கான அறிவித் தல்களை ஒரு வருடத்திற்கு முன் குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ-ற)

கோஷ்டி ஒன்ற 48,000 பெறமதியான

## மாகாண இன விகிதாசாரம்

| மாகாணம | சிங்களம் | தமிழ் | முஸ்லிம | இந்தியத் தமிழ் | மலேயர் | பறங்கியர் | ஏனையோர் | மொத்தம |
|---|---|---|---|---|---|---|---|---|
| மேற்கு | 84-7 | 5-8 | 6-1 | 1-5 | 0-8 | 0-7 | 0-4 | 100 |
| மத்தி | 65-6 | 7-5 | 7-3 | 19-0 | 0-2 | 0-1 | 0-3 | 100 |
| தெற்கு | 95-1 | 0-8 | 2-5 | 1-3 | 0-2 | 0-0 | 0-1 | 100 |
| வடக்கு | 3-2 | 86-3 | 4-6 | 5-7 | 0-0 | 0-0 | 0-2 | 100 |
| கிழக்கு | 25-8 | 40-3 | 32-2 | 1-1 | 0-1 | 0-4 | 0-1 | 100 |
| வடமேற்கு | 89-9 | 2-8 | 6-4 | 0-5 | 0-1 | 0-1 | 0-2 | 100 |
| வடமத்தி | 91-7 | 1-5 | 6-5 | 0-1 | 0-0 | 0-0 | 0-2 | 100 |
| ஊவா | 76-2 | 4-7 | 3-5 | 15-1 | 0-2 | 0-6 | 0-2 | 100 |
| சப்பிரகமுவ | 85-4 | 2-3 | 3-3 | 8-8 | 0-0 | 0-1 | 0-1 | 100 |

## மாவட்ட இன விகிதாசாரம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | கொழும்பு | 77-6 | 10-0 | 8-2 | 1-2 | 1-3 | 1-2 | 0-5 | 100 |
| 2 | கம்பஹா | 92-0 | 3-5 | 2-7 | 0-4 | 0-6 | 0-6 | 0-2 | 100 |
| 3 | களுத்துறை | 87-2 | 1-2 | 7-4 | 4-1 | 1-1 | 0-0 | 0-0 | 100 |
| 4 | கண்டி | 74-3 | 5-0 | 10-5 | 9-4 | 0-3 | 0-2 | 0-3 | 100 |
| 5 | மாத்தளை | 79-9 | 6-8 | 7-0 | 7-0 | 0-1 | 0-0 | 0-2 | 100 |
| 6 | நுவரெலியா | 42-1 | 12-7 | 2-0 | 42-7 | 0-2 | 0-1 | 0-2 | 100 |
| 7 | காலி | 94-5 | 00-9 | 3-2 | 1-4 | 0-0 | 0-0 | 0-0 | 100 |
| 8 | மாத்தறை | 94-5 | 0-7 | 2-5 | 2-2 | 0-0 | 0-0 | 0-1 | 100 |
| 9 | அமபாந் தோட்டை | 97-1 | 06 | 1-2 | 6-1 | 9-0 | 0-0 | 0-0 | 100 |
| 10 | யாழ்ப்பாணம | 0-8 | 86-9 | 1-6 | 0-7 | 0-0 | 0-0 | 0-0 | 100 |
| 11 | கிளிநொச்சி | 1-1 | 81-2 | 1-2 | 16-4 | 0-0 | 0-1 | 0-0 | 100 |
| 12 | மன்னார் | 8-2 | 51-3 | 26-1 | 13-0 | 0-0 | 0-0 | 1-4 | 100 |
| 13 | வவுனியா | 16-6 | 56-8 | 6-8 | 19-6 | 0-0 | 0-0 | 0-2 | 100 |
| 14 | முல்லைத்தீவு | 5-2 | 75-4 | 4-7 | 14-5 | 0-0 | 0-1 | 0-1 | 100 |
| 15 | திருமலை | 35-6 | 32-5 | 29-1 | 2-0 | 0-3 | 0-4 | 0-1 | 100 |
| 16 | மட்டக்களப்பு | 3-4 | 70-8 | 23-9 | 1-2 | 0-0 | 0-7 | 0-0 | 100 |
| 17 | அமபாறை | 37-8 | 20-0 | 41-5 | 0-4 | 0-0 | 0-2 | 0-1 | 100 |
| 18 | குருநாகல் | 92-9 | 1-2 | 5-0 | 0-5 | 0-1 | 0-1 | 0-2 | 100 |
| 19 | புத்தளம | 82-6 | 6-6 | 9-9 | 0-5 | 0-2 | 0-1 | 0-1 | 100 |
| 20 | அ- புரம | 91-9 | 1-2 | 6-5 | 0-1 | 0-1 | 0-0 | 0-2 | 100 |
| 21 | பொலன் னறுவை | 91-4 | 2-0 | 6-4 | 0-0 | 0-0 | 0-0 | 0-2 | 100 |
| 22 | பதுளை | 69-1 | [illegible] | 4-2 | 20-2 | 0-2 | 0-1 | 0-3 | 100 |
| 23 | மொனராகலை | 92-7 | [illegible] | 1-9 | 3-2 | 0-1 | 0-0 | 0-1 | 100 |
| 24 | இரத்தினபுரி | 8[illegible]-0 | 2 4 | 1-7 | 10-6 | 0-1 | 0-0 | 0-2 | 100 |
| 25 | கேகாலை | 85-9 | 22 | 5-0 | 6-7 | 0-0 | 0-0 | 0-2 | 100 |

(1 அம பக்கத் தொடர்ச்சி)

துங்க பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார் வெளிநாட்டு தூதுவர்களும் கலந்து கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளார்கள்

எமது உள்ளூர்ப் படங்க ளைக் கொண்டு புதுடில்லியில் திரைப்பட விழா நடத்த இருக்கி றோம-

கொழும்பில் மட்டுமன்றி கண்டி, காலி. இரத்தினபுரி, அனு ராதபுரம ஆகிய இடங்களிலும இந்திய திரைப்பட விழா நடக் கும-

ராஜ்கபூர் மிருணாள்சென் போன்ற இயக்குநர்களின் படங்களை அகஸ்ட் செப்டம பர் மாதங்களில் எமது இரண் டாவது திரைப்பட விழாவாக நடத்த இருக்கிறோம்-

எங்கள் மக்களின் ரசனைக் கேற்ற நல்ல படங்களை இந்தி யாவிலிருந்து மட்டுமல்ல கனடா, ஜப்பான், ரஷ்யா, இங்கிலாந்து, அமெரிக்கா பிரான்ஸ் ஜெர்மனி போன்ற பல நாடுகளிலிருந்தும கொண்டுவரத் திரைப்பட கூட் டுத்தாபனத் தலைவர் முடிவு செய்திருக்கிறார்-

இப்படி அவர் கூறினார்-

பத்திரிகையாளர் மாநாட் டில் இந்தியத் தூதரக தலைவர் கலாசார பிரிவு இரண்டாவது செயலாளர் திரு எம பி சிநூ, தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன தலைவர் திரு டபிள்யூ ஜே பெர் ணாண்டோ சினிமா விமர்சகர் திரு எட்வின் ஆரியதாச, திரைப் படக் கூட்டுத்தாபன செயற் பாட்டு பணிப்பாளர் திரு சங்க தாச ஆகியோரும உரையாற்றி னார்கள்-

(உ-கூ)


## பெயர் மாற்றமும் மத மாற்றமும்

சிவகுமார் நடராஜா 67/110, புளோஸ் லேன், கொழும்பு-9, ஆகிய நான் இஸ்லாம மதத்தைத் தழுவி முகம்மது நஸீம என்ற பெயரை மாற்றிக் கொள்வ தோடு சகல ஆவணங்களிலும இவ்வாறே கையெழுத்திடுவேன் என இலங்கை அரசுக்கும, மக்க ளுக்கும அறியத் தருகிறேன்-

(ஒப்பம)
எம நஸீம்
032493

## நூல் வெளியீட்டு விழா!

### இன்று வெளியாகும்

### "பள்ளிவாசல்"

நூலாசிரியர்
கலீபதுஷ்ஷாதுலி அல்ஹாஜ் மௌலவி
எஸ் எம ஏ எம முஸமமில்
(ஆயுட்காலத் தலைவர், கல்வி பொருளாதார அபிவிருத்திச் சங்கம்)

அவர்களை வாழ்த்துவதுடன்
அனைவரையும அன்புடன் வரவேற்கிறோம

உறுப்பினர்கள்
கல்வி பொருளாதார அபிவிருத்திச் சங்கம
தொட்டவத்தை, பாணந்துறை

சென்னை கோடம்பாக்கம்

## ஆலிவுட்டில் விஜி-கல்யாணி இடையே போட்டி



விஜி



கல்யாணி

தென்னகத்தின் "ஆலிவுட்" என அழைக்கப்படும சென்னை கோடமபாகத்தில் "புல்லானாலுமபொஞ்சாதி" படப்பிடிப்புகள் அண்மையில் நடந்தன—

புல்லானாலும புருஷன் என்று மனைவி கணவனை மதிக்க வேண்டுமாம. பெஞ்சாதி புல் போல இருந்தால் கணவன் கல்லைத் தேடி ஓடலாமோ! கூடாத கூடாது என்பதை ஆணித்தரமாக அடித்துச் சொல்லும கதை உள்ள "புல்லானாலும பொஞ்சாதி" என்ற படத்தின் படப்பிடிப்பு காதுக்கு குளிர்ச்சியான பாடல் ஒலிக்க, கவர்ச்சி நடனங்கள் நடக்க, சுறு சுறுப்புடன் அமர்க்களமாக நடந்து கொண்டிருந்தது.

ஜெய்சந்தோக்ஷிமா ஆர்ட்ஸ் தயாரிக்கும "புல்லானாலும பொஞ்சாதி" படத்தின் கதாநாயகனாக நடிப்பதுடன் டைரக்டும செய்பவர் ராஜ்ஸ்ரீதர். இவர் நேற்ற வந்த இன்ற யார் யாரையோ காக்கா பிடித்தோ, காலை தடவியோ சினிமா உலகுக்கு வந்தவர் அல்ல! 10 ஆண்டுகளாக பல படங்களில் துணை அசோசியேட் டைரக்டராக பணி புரிந்து, தொல்லைகளை சோதனைகளை வென்று இன்று கதாநாயகனாகவும நடிக்க வந்திருப்பவர்.

சாந்தி ஆட, சேர்ந்த ஆட வேண்டும ராஜ்ஸ்ரீதர்— டிஸ்கோவின் கவர்ச்சிக் குலுக்கல் அங்கு வந்திருந்த நட்சத்திரங்களையே குலுங்க குலுங்க சிரிக்க வைத்தது.

விஜி – கல்யாணி கதாநாயகிகள். இந்த இரு நாயகிகளும அன்ற போட்டி போட்டு நடித்தனர். "கராத்தே பயிற்சி பெற்ற விஜி நல்லவேளை கராத்தே உடையில் வந்து நம்மை பயமுறுத்தவில்லை— அழகாக சேலை கட்டி வந்திருக்கிறார் என்ற படத்தில் நடிக்க வந்திருந்த எஸ் எஸ் சந்திரன் தமாஷ் செய்து கொண்டிருந்தார்.

கதை வசனம எழுதும அட்டேமனோகரும நடிகர் தான். அதனால் நடிகர் நடிகைகளிடம மிக தாராளமாகவே பழகி படப்பிடிப்பு வேகமாக நடைபெற உழைத்துக் கொண்டிருந்தார். (இ-10)



மலர்களை வண்டுகள் நாடுவது இயற்கை. ஆனால் இங்கே வண்டை மலர் சுற்றி வருகிறதே! அதனால் தான் ஆடையைக் குறைத்து உடலை வளைத்து மினுக்கி குலுக்கி ஆடும தலைமானின் கவர்ச்சி நடனம காளைக்கு இனிமையைத் தரவில்லையோ?

[ராஜ்ஸ்ரீதர் – டிஸ்கோ சாந்தி] (இ-10)

## ராமராஜன் ரேகா இணையும் படம்

கலைத்தாய் என்னும நிறுவனம வர்த்தி, அனந்தராஜ் காந்திமதி "நீ ஒரு தனிப்பிறவி" என்ற பெய மற்றும பலர் நடிக்கிறார்கள்.

# காஷ்மீர் மீதான அடக்குமுறையை உடன் கைவிடுக!

## இந்தியாவுக்கெதிராக வங். ஜனாதிபதி குரல்

டாக்கா, மார்ச் 9

**காஷ்மீர் முஸ்லிம்கள் மீது இந்தியா அடக்கு முறையைக் கையாளகிறது. இதனை உடனடியாகக் கைவிட வேண்டும் என்று வங்காள தேச ஜனாதிபதி ஹுசேன் மொகமட் எர்ஷாத் வியாழக்கிழமை கண்டனக் குரல் எழுப்பினார்.**

காஷ்மீர் முஸலிமகள் மீது கையாளப்படும அடக்குமுறை குறித்து நாம விழிப்பாக இருக்கிறோம. இந்த நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும, என ஜனாதிபதி எர்ஷாத் தெரிவித்திருக்கிறார், இதுபற்றிய செய்தியை வங்காளதேச உத்தியோக பூர்வ செய்தி ஸதாபனமான பி எஸ் எஸ் வியாழனன்று வெளியிட்டது.

சுதந்திரம கோரி போராட்டம நடத்தி வரும காஷ்மீரிகள் தமது போராட்டத்தைக் கைவிட வேண்டுமென இந்தியா தொடர்ந்து எச்சரித்தது, போராட்டத்தை அவர்கள் கைவிடாத நிலையில் கடந்த ஜனவரி மாத நடுப்பகுதியில் இருந்து காஷ்மீர் முஸ்லிம கிளர்ச்சியாளரைக் கட்டுப்படுத்தும நடவடிக்கையில் இந்தியா இறங்கியது. இதன் எதிரொலியாக இன்று வரை 190 பேர் உயிரிழந்துள்ளனர்.

வங்காளதேச வெளிநாட்ட மைச்சர் அனிசுல் இஸ்லாம மஹ்மூத் புதனன்று பாகிஸ்தான் பிரதமர் சஹாப்சாயி யாக்கூப் கானைச் சந்தித்தார், இந்தியாவுடனான சர்ச்சையை பேச்சு வார்த்தை மூலம தீர்த்துக் கொள்ள பாகிஸ்தான் முன்வர வேண்டும என அவர் கூறினார். (எ)

### இந். குழுவுக்கு எதிர்ப்பு

ஸ்ரீநகர், மார்ச் 9

காஷ்மீர் நெருக்கடியைத் தீர்க்கும நோக்கத்துடன் வியாழக்கிழமை காஷ்மீர்,

### லிபியா மறுப்பு

திரிப்பொலி, மார்ச் 9

லிபியா, இரசாயன ஆயுத உற்பத்தியில் ஈடுபடுவதாக அமெரிக்கா சுமத்திய குற்றச்சாட்டொன்றை லிபியா மறுத்திருக்கிறது.

உத்தியோகபூர்வ ரீதியில் அமெரிக்கா சுமத்திய குற்றச்சாட்டை உடனடியாக மறுத்து லிபிய செய்தி ஸ்தாபனமான ஜானா செய்தி வெளியிட்டிருக்கிறது. (எ)

### ஊழல் வழக்கு

மணிலா, மார்ச் 9

பிலிப்பைன்ஸ் ...தர்க்குட்சி தலைவர் ஜுவான் பொன்ஸ என்றைலுக்கெதிராக புதிதாக ஊழல் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது.

பிலிப்பைன்ஸ் அரசாங்கம இந்த வழக்கை வியாழனன்று தாக்கல் செய்தது. (எ)

POLYTHENE SEALER

பொலிதீன் ஸீலர்

குறைந்த விலையில்

பணி புரிந்து, தொல்லைகளை சோதனைகளை வென்று இன்று கதாநாயகனாகவும நடிக்க வந்திருப்பவர்.

இவர் பழமபெரும ஒளிப்பதிவாளர்களில் ஒருவர்.

"சிலப்பதிகாரமோ... சிந்தாமணி குண்டலகேசி என ஒலிக்கும பாடலுக்கு ஏற்ப டிஸ்கோ

## ரேகா இணையும் படம்

கலைத்தாய் என்னும நிறுவனம "நீ ஒரு தனிப்பிறவி" என்ற பெயரில் படம தயாரிக்கிறது.

ராமராஜன் காதல் ஜோடியாக நடிக்கிறார், ரேகா.

வி கே ராமசாமி, கவுண்டமணி, செந்தில், வினு சக்கரவர்த்தி, அனந்தராஜ் காந்திமதி மற்றும பலர் நடிக்கிறார்கள்.

இளையராஜா இசை அமைக்க கே பி தயாளன் காமிராவை கையாள காரை சுப்பையா கதை எழுத, திரைக்கதை அமைத்து டைரக்ட் செய்கிறார். காண்டீபன்.

இவர் ராம நாராயணன் டைரக்ஷனில் திரைக்கு வந்த 60க்கு அதிகமான படங்களில் 40 படங்களுக்கு துணை டைரக்டராக பணி புரிந்தவர் முதல் முறையாக டைரக்ட் செய்யும படம, "நீ ஒரு தனிப்பிறவி"

ஷெரீப் விஜயன் குமார் மூவரும இணைந்து நிறைந்த பொருட் செலவில் தயாரிக்கும படம "நீ ஒரு தனிப்பிறவி".

இயற்கை அன்னை கொஞ்சிக் குலவும பெங்களூர், மெர்க்கா:ஃ, நாகர் கோவில் சுற்றுப் பகுதியில் வளரும படம, "நீ ஒரு தனிப்பிறவி". (இ–10)

# அதிசய பிறவியில் ரஜனியுடன் ஷீபா


"அந்தாகானூன்" "ஆக்ரி ரஸ்தா", "சாஸ்பாஸ்" போன்ற இந்தி வெற்றிப் படஙகளுடன் "சிகப்பு மனிதன்" என்ற தமிழ் படத்தையும தயாரித்த பிரபல பட நிறுவனம, லட்சுமி புரொடக்சன்ஸ்.

இந்த நிறுவனம ரஜனிகாந்த்–கனகா நடிக்க, எஸ் பி முத்துராமன் டைரக்ஷனில் அதிசய பிறவி" என்ற படத்தை தயாரிக்க திட்டமிட்டு இருந்தது இதன் படப்பிடிப்பு தொடஙகியது.

இந்தப் படத்தில் ரஜனிகாந்த் இரட்டை வேடமேற்று நடிக்கிறார்– அப்பாவியான பாலுவாகவும ரவுடிக்கு ரவுடியான காளியாகவும நடிக்கும ரஜனிகாந்தின் ஜோடிகள் கனகா, புதுமுகம ஷீபா–

அப்பாவி வேடத்தில் கனகா ஜோடி– ரவுடிக்கு ரவுடி காளி வேடத்தில் ஜோடி ஷீபா. படப்பிடிப்பு சென்னையை அடுத்துள்ள சிவாஜி தோட்டத்தில் நடந்தது.

காதலுடன், ரவுடிகளை ரத்தம கக்க கக்க ரஜனிகாந்த் அடித்து நொறுக்கும காட்சிகளும படமாக்கப்பட்டன பிரமாண்டமான முறையில் உருவாகும "அதிசய பிறவி"யில் செந்தாமரை, நாகேஷ், வி கே ராமசாமி, வினு சக்கரவர்த்தி ஜெய் கணேஷ், சுதாகர், சின்னி ஜெயந்த் கமலா காமேஷ் விஜயலலிதா மற்றும பலர் நடிக்கிறார்கள்.



ரஜனிகாந்த்

பஞ்சு அருணாசலம வசனம எழுத, இளையராஜா இசை அமைக்க, டைரக்ட் செய்கிறார் பஞ்சு அருணாசலம. "அதிசய பிறவி" முதல் கட்ட படப்பிடிப்பு நடந்தது. அடுத்த கட்ட படப்பிடிப்பு விரைவில் தொடஙகுகிறது. (இ–10)

## உறவுகள் தொடரட்டும்

ஸ்ரீவித்யாலயா கிரியேசன்ஸ் என்னும நிறுவனம "உறவுகள் தொடரட்டும" என்ற பெயரில் படம தயாரிக்கிறது,

காமகோடியன் பாடல்கள் எழுத, குமலேந்தர் இசை அமைக்க, பாலராஜா டைரக்ட் செய்கிறார் ஜி என் பி தயாரிக்கிறார், (இ–10)

தினபதி சினிமா

## எதிர்ப்பு

ஸ்ரீநகர், மார்ச் 9

காஷ்மீர் நெருக்கடியைத் தீர்க்கும நோக்கத்துடன் வியாழக்கிழமை காஷ்மீர் சென்ற அனைத்துக் கட்சிக் குழுவினருக்கு பெரும எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. அவர்களைத் திருமபிப் போய் விடுமாறு காஷ்மீரிகள் குரல் எழுப்பினார்கள்.

ஸ்ரீநகர் ஹோட்டலொன்றைச் சுற்றி வளைத்த 40க்கு மதிகமான கோஷ்டியொன்று "ராஜீவ் காந்தி திருமபிப் போ" "எமக்கு சுதந்திரம வேண்டும" "ராஜீவ்காந்தி காஷ்மீரை விட்டு வெளியேறு" என்க் கோஷமெழுப்பினர்.

ஹோட்டலைச் சுற்றி 200க்கு மதிக பாதுகாப்பு அதிகாரிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்,

காஷ்மீர் கிளர்ச்சியாளர்கள் விடுத்த வேண்டுகோள் ஒன்றிற்கேற்ப அனைத்துக் கட்சி தூதுக் குழுவினர் காஷ்மீரை விட்டு உடனே வெளியேற வேண்டுமென்ற செய்தியொன்று அடிக்கடி ஒலிபரப்பப்பட்ட வண்ணமிருந்தது,

தூதுக்குழுவினர் கலவரம நிறைந்த காஷ்மீர் வீதிகளைச் சுற்றிப் பார்ப்பதற்கு முடியாத நிலை ஏற்பட்டது, இதனையடுத்து முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்திக்கு ஊரடங்குச் சட்ட அனுமதிப் பத்திரம ஒன்றும் நகரைச் சுற்றிப் பார்க்க காரொன்றும வழங்கப்பட்டது, துணைக்கு பாதுகாப்பு அதிகாரிகள் கொடுக்கப்பட்டனர் ஆயினும அவர் எல்லாவற்றையும ஏற்கமறுத்தார்,

இதேவேளையில் மாநில ஆளுநர் ஜெக்மோகன் அரசியல் கட்சியினருக்கு எச்சரிக்கையொன்றையும் விடுத்திருந்தார், காஷ்மீர் போராளிகள் அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ய எத்தனிக்கலாம என அவர் தெரிவித்தார். (எ).


## குறைந்த விலையில்




ரூபா 2179/– முதல்

றெபேட் ஏஜென்சீஸ் லிமிட்டெட்

88– றெக்கிளமேசன் றோட் (என் எச் எம அப்துல் காதர் றோட்)

கொழும்பு—11.

தினபதி
தந்தி "தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல 1613
— 1990 மார்ச் 10 —
சுடர் 18 கதிர் 4430

# தி. மு. க. வுக்கு மக்களின் ஆதரவு பெருகுகிறது

## தேர்தல் முடிவுகளை அடுத்து முதல்வர் கருணாநிதி கருத்து கணிப்பு

பாண்டிச்சேரி சட்டசபை பழனி லோகசபை தேர்தல் முடிவுகள் மூலம் தி மு கவுக்கு மக்கள் ஆதரவு பெருகி வருகிறது என்பது புலனாகிறது என்று தமிழக முதல் அமைச்சர் கருணாநிதி கூறினார்.

பாண்டிச்சேரியில் இதற்கு முன்னர் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அங்குள்ள 6 தொகுதிகளிலும காங்கிரஸ்தான் முன்னணியில் இருந்தது, இப்போது நடந்துள்ள சட்டசபை தேர்தலில் தி மு க முன்னணியில் இருக்கிறது, இந்த வித்தியாசத்திற்குக் காரணம என்ன?

கடந்த காலத்தில் மக்கள் தவறு செய்து விட்டதை உணர்ந்து இப்போது சரிவர தங்கள் கடமையை செய்யத் தொடங்கி உள்ளனர்—

இந்த மாற்றத்தை பாண்டிச்சேரி தேர்தலில் மாத்திரமல்ல, பழனி நாடாளுமன்ற தேர்தலிலும தெளிவாக உணர முடிகிறது—

அதாவது காங்கிரஸ் அணிக்கு 1984 இல் மக்களின் ஆதரவு 46 சதவீதமாக இருந்தது, 1989 இல் அது 33சதவீதமாக மாறி இப்போது 12சதவீதமாகக் குறைந்துள்ளது—

இதன் மூலம தி மு கவின் பிரபல்யம வளர்ந்து இருப்பதை இது காட்டுகிறது—

— இவ்வாறு திரு கருணாநிதி குறிப்பிடுகிறார்,

### காங்கிரசுக்கு ஆதரவு

ஆனால் இந்திரா காங்கிரஸாரின் கருத்தோ இதற்கு மாறாக இருக்கிறது;

இந்தத் தேர்தலுக்குப் பிறகு காங்கிரசின் செல்வாக்கு அதிகரித்து வருகிறது என்று தமிழக காங்கிரசுக்கு மக்கள் ஆதரவு பெருகி உள்ளது என்றுதான் கூற வேண்டும.

உதாரணமாக கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ராஜஸ்தானில் காங்கிரசுக்கு ஒரு இடம கூடக் கிடைக்கவில்லை, அதே போல் மத்திய பிரதேசம, பீகார், ஒரிசா குஜராத் ஆகிய மாநிலங்களில் தலா 4 இடங்களே கிடைத்து இருந்தன—

மராட்டிய மாநிலத்தில் 19 இடங்கள் கிடைத்து இருந்தன, ஆனால் இப்போது நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலை வைத்துப் பார்க்கும போது மஹாராஷ்டிரா, அருணாசல பிரதேசம ஆகிய மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி ஆட்சியை பிடித்துள்ளது—

பழனி தொகுதியில் வாக்குச் சாவடிகளைக் கைப்பற்றுதல் போன்ற வன்செயல்களைத் தாங்கிக் கொண்டு மக்கள் காங்கிரஸ் வேட்பாளரை அதிக பெருமபான்மை வாக்குகளால் தெரிவு செய்துள்ளனர்.

கேள்வி— பாண்டிச்சேரியில் மீண்டும தி மு க ஆட்சியைப் பிடித்து உள்ளது— பழனி தொகுதியில் சதவீதப்படி பார்த்தால் அதிக ஓட்டுக்களை தி மு க பெற்றுள்ளது என்று முதல் அமைச்சர் கருணாநிதி கூறியுள்ளாரே?

பதில்— பழனியில் இவ்வளவு அடக்கு முறையை மீறி நாங்கள் ஜெயித்ததே பெரிய விஷயம, எப்போதுமே அணையப் போகிற விளக்கு சுடர் விட்டுத்தான் பிரகாசிக்கும, அந்த வகை சுடரை பாண்டிச்சேரியில் தி மு கழகம பெற்றுள்ளது—

கலைஞர் கூறியுள்ளபடி தி மு கவுக்குப் பலம கூடி இருப்பதாக அவர் நமபினால் தமிழக சட்டசபையைக் கலைத்து விட்டு மீண்டும தேர்தலை நடத்தத் தயாரா?

— இவ்வாறு வாழப்பாடி ராமமூர்த்தி கேட்டார்,

(ம-10)

## சமய நிகழ்ச்சிகள்

### சக்தியாகமும் பூஜையும்

கொழும்பு மார்ச் 9—

கொழும்பு ஸ்ரீ ....... வீதியில் அமைந்துள்ள ஸ்ரீதேவி கருமாரி அம்மன் ஆலயத்தில் இன்று 10ஆம திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு சக்தி யாகமும பூஜையும நடைபெறும,

மாலை 6 மணிக்கு இங்கு திருவிளக்குப் பூசையும அதைத் தொடர்ந்து முத்துமாரி அமமனுக்கு விசேஷ பூஜையும நடைபெறும.

(இ-வ)

### அக்கரைப்பத்தனை

### இலட்சார்ச்சனை: இரதோற்சவம்

கொழும்பு, மார்ச் 8

கொட்டாஞ்சேனை ஸ்ரீ முத்துமாரியமமன் தேவஸ்தானத்தில் மாசிமக தினமான இன்று சனிக்கிழமை காலை

8 மணிக்கு அஷ்டோத்தர சஹஸ்ர (10008) சங்காபிஷேகம நடைபெறும— பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூஜை இடமபெறும—

மாலை 6 மணிக்கு அமபிகை விசேச மின்சாரதீப அலங்கார இரதத்தில் எழுந்தருளுவார்— டாஞ்சேனை வீதி, ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்த பிக்கரிங்ஸ் வீதி வழியாக மீண்டும கொட்டாஞ்சேனை வீதியை அடைந்து பக்தர்களுக்கு திருவருள் காட்சி நல்கி திருக்கோவிலை வந்தடைவார்.

## இறக்குமதியான ரேந்தையின் பெறுமதியை குறைத்துக் காட்டிய வர்த்தகர்

கொழும்பு மார்ச் 9

இறக்குமதித் தீர்வையை குறைத்துச் செலுத்தும நோக்கில் 26 லட்சம ரூபா பெறுமதியான ரேந்தையை ஒன்றரை லட்சம ரூபா பெறுமதியானது என்று குறைத்துக் காட்டிய பிரபல வர்த்தகர் ஒருவர் சுங்க அதிகாரிகளினால் பிடிபட்டார்— ரேந்தையும பறிமுதல் செய்யப்பட்டது—

கொழும்பு இரண்டாம குறுக்குத் தெருவைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரே இவ்வாறு மோசடி செய்து பிடிபட்டவராவார்—

இவர் சிங்கப்பூரில் இருந்து கப்பல் மூலம 26 லட்சம ரூபா பெறுமதியான ஐந்து லட்சத்து 26 ஆயிரம யார் ரேந்தை தொகையை இறக்குமதி செய்துள்ளார்—

ஆனால் இறக்குமதித் தீர்வையைக் குறைக்கும நோக்கில் ஒன்றரை லட்சம ரூபா பெறுமதியான ரேந்தையையே தாம இறக்குமதி செய்ததாகக் கூறியுள்ளார்—

சுங்க அதிகாரிகள் இவரது மோசடி முயற்சியை கண்டுபிடித்தனர்— ரேந்தையையும பறிமுதல் செய்தனர்—

[ல—வ]



## செய்தித் திரட்டு

### சிரமதான மூலம் குளம் சுத்திகரிப்பு

நாத்தாண்டி மார்ச் 8

மஹாமவவ குளம அண்மையில நடைபெற்ற சிரமதான மூலம சுத்தம செய்யபபட்டுள்ளது—

ஒரு நாள் முழுவதும நடைபெற்ற சிரமதானம மூலம இக்குளம சுத்தம செய்யப்பட்டது— சுமார் 500 பேரளவில் இச்சிரமதான பணியில் பங்கு கொண்டனர்.

வடமேல் மாகாண சபை உறுப்பினரும, சமாதான நீதிவானுமான திரு நேவிஸ் பர்னாந்து தலைமையில் இச்சிரமதானப் பணிகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன,

(ஐ-225)

### மின்சார வசதி

சிலாவத்துறை மார்ச் 8

சிலாவத்துறை அரசினர் முஸ்லிம வித்தியாலயத்துக்கு பாடசாலை அபிவிருத்தி சபையின் முயற்சியால் மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது,

மாணவர்கள் தங்கள் பாடங்களை இரவு நேரங்களில் படிப்பதற்கு இதனால வசதி ஏற்பட்டுள்ளது—

தனிப்பட்ட நலன்விரும்பிகள் சிலரின் முயற்சியால் பாடசாலைக்கு சுற்றுமதில் கட்டும வேலையும நடைபெறுகிறது—

(ஐ-ங)

### விரிவுரைகள் ஆரம்பம்

கொழும்பு மார்ச் 9

கொழும்பு பல்கலைக்கழக உள்நாட்டு மருத்துவக் கல்லூரியின் இரண்டாம மூன்றாம வருட ஆயுர்வேத யூனானி மாணவர்களுக்கு விரிவுரைகள் இம்மாதம் 15 ஆம திகதி ஆரம்பிக்கப்படும.

1990 மார்ச் 1ஆம் திகதி முதல் இரண்டாம மூன்றாம வருட மாணவர்களுக்கு நூல் நிலைய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன,

இரண்டாம வருட மாணவர்களுக்கு எஞ்சிய பாடங்களுக்கான பரீட்சை மே மாதம இரண்டாம திகதி முதல் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது—

## இன விகிதாசார அடிப்படையில் நியமனங்கள்

அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், அரசாங்கம பொறுப்பேற்ற நிறுவனங்கள் மற்றும மாகாண பொதுச் சேவை ஆகியவற்றிற்கு ஆட்களை நியமிப்பது குறித்து தேசியக் கொள்கை ஒன்று உருவாக்கப்பட்டிருக்கிறது.

அதன்படி எல்லா நியமனங்களும தகுதியானவர்களுக்கு இன விகிதாசார அடிப்படையிலேயே வழங்கப்படும. அரசியல் செல்வாக்கிற்கு இடமிருக்காது.

பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்நாட்டு அமைச்சர் திரு யூ பி விஜேகோன் நேற்று இந்த விவரங்களைத் தெரிவித்தார்.

இன விகிதாசாரப்படி நியமனங்களை வழங்கும போது சிங்களவர்களுக்கு 75 சதவீத நியமனங்கள் கிடைக்கும.

தமிழர்களுக்கு 12. 7 சதவீதம.

இந்திய வமசாவளித் தமிழர்களுக்கு 5. 5 சதவீதம.

முஸ்லிமகளுக்கு 8 சதவீதம.

தேசிய ரீதியில் நியமனங்களை வழங்கும போதும, பதவி உயர்வுகளை வழங்கும போதும நாட்டின் இன விகிதாசாரம கணக்கில் எடுக்கப்படும.

மாகாண அடிப்படையில் நியமனங்களையும பதவி உயர்வுகளையும வழங்கும

உயர்வுகளையும் வழங்கும் போது மாகாண இன விகிதாசாரமும், மாவட்ட அடிப்படையில் நியமனங்களையும், பதவி உயர்வுகளையும் வழங்கும் போது மாவட்ட இன விகிதாசாரமும் கணக்கில் எடுக்கப்படும் என்று அமைச்சர் விளக்கம் அளித்துள்ளார்.

நியமனங்கள் வழங்குவதில் இனப் பாகுபாட்டுக்கும் அரசியல் தலையீடுகளுக்கும் இடமில்லை என்றால் உண்மையில் எத்தனையோ பிரச்சினைகளும் சிக்கல்களும் தவிர்க்கப்படும்.

அந்த வகையில், தகுதியானவர்களுக்கு இன விகிதாசார அடிப்படையில் நியமனங்களை வழங்கும் ஏற்பாடு வரவேற்கத்தக்கதும் பாராட்டுக்கு உரியதுமாகும்.

இன விகிதாசார அடிப்படையில் நியமனங்கள் வழங்குவது அரசின் கொள்கையாக இருந்தாலும் அது அதிகாரிகள் மட்டத்தில் சரிவரக் கடைப்பிடிக்கப்படுமா என்பது கேள்வி.

கடந்த காலச் சம்பவங்கள் மேற்படி கேள்விக்கும் சந்தேகத்துக்கும் இடமளிக்கின்றன.

சில நியமனங்களில் தமிழர்களும் முஸ்லிம்களும் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டதை கடந்த இரண்டாம் திகதி இந்தப் பத்தியில் சுட்டிக்காட்டினோம்.

அப்படிப் புறக்கணிப்பு நடக்காமல் உறுதி செய்வதற்கு எல்லா அமைச்சுகளிலும் கண்காணிப்புக் குழுக்களை நியமிக்க வேண்டும் என்று அரசாங்க கட்சி நாடாளுமன்றக் குழுப் பிரதிக் கொறடா அல்ஹாஜ் ஏ எச் எம் அஸ்வர் ஜனாதிபதியைக் கேட்டிருப்பதையும் குறிப்பிட்டிருந்தோம்.

தாமதமின்றிக் குழுவை நியமிக்க வேண்டும் என்று இங்கு வலியுறுத்த விரும்புகிறோம்.

வெறுமனே கொள்கை வகுப்பது பயன் தராது. அது சரிவர நடைமுறைப்படுத்தப் படுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

---

கூர்ந்து வருகிறது என்று தமிழக இ காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கூறினார். அவர் கூறியதாவது—

2 மாநிலங்களில் இப்போது நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலை நாடாளுமன்ற தேர்தலுடன் ஒப்பிட்டு பார்க்கையில்

## சர்வதேச...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறார்,

இவ்விழாவில் ஐ தொ கா தலைவர் ஜனாப் அஸீஸின் 51 வருட சேவையைப் பாராட்டி, மாதர் அணியினர் அவருக்குப் பொன்னாடை போர்த்து அவரைக் கௌரவிப்பர்.

(உ—ந)

## 12 ஆம் திகதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டில் இதுபற்றி ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது—

இந்த மாநாட்டில் தர்மகர்த்தாக்கள், உலமாக்கள், கதீப்மார்கள், உலமா சபை உறுப்பினர்கள் ஆகியோர் பங்குபற்றினர்

இதுபற்றி கதீப்மார்கள் ஜும்ஆத் தொழுகைக்குப் பின்னர் அறிவிக்க வேண்டுமென்றும் மாநாட்டில் கேட்கப்பட்டது—

(இ—007)

---

## அக்கரைப்பத்தனை அம்மன் ஆலயத்தில் மாசி மக விழா

கொழும்பு, மார்ச்— 9

அக்கரப்பத்தனை பசுமலை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த உற்சவ "மாசி மக விழா" இன்று 10ஆம் திகதி மேற்படி ஆலயத்தில் வெகு விமரிசையாக நடைபெறும்—

மேற்படி விழாவில் கரகம், காவடி, மேளக் கச்சேரிகள் உட்பட பசுமலை நகரில் மாரியம்மனின் புவனி ஊர்வலமும் விசேஷ அம்சமாக இடம் பெறும்—

மலையகக் கலைஞர் ஒன்றியம் வழங்கும் இன்னிசை நிகழ்ச்சியும், பரத நாட்டியம், நாடகங்கள், பக்தி இன்னிசைப் பாடல்களும் இங்கு நடைபெறவுள்ளன—

(இ—ந)

## 3 வயது குழந்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி).

பரிதாபகரமாக மாண்டது,

புது வீடொன்றை கட்டுவதற்கு அத்திவாரம் இடும் வைபவத்துக்காக, வீட்டார் வீட்டு முற்றத்தில் வைத்து மஸ்கட் தயாரித்துக் கொண்டிருந்தனர்.

அடுப்புக்கருகில் இருந்த கதிரை ஒன்றின் மீது ஏறக் குழந்தை முயன்றது, அச்சமயமே குழந்தை கொதிக்கும் எண்ணெய் தாச்சியில் தவறி விழுந்தது என்று கூறப்படுகிறது,

பலத்த எரிகாயங்களுக்கு உள்ளான இக்குழந்தை மாத்தறை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு சில மணி நேரத்தில் இறந்து விட்டது,

(உ—வ).

---

11-3-90 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு திருவூஞ்சல் நடைபெறும். 12-3-90 திங்கட்கிழமை பகல் 10-00 மணிக்கு பெரியாச்சிக்கு விஷேச பூஜையும் நடைபெறும்.

13-3-90 செவ்வாய்க்கிழமை மாலை 4-30 மணி முதல் வைரவருக்கு அபிஷேகமும், அதைத் தொடர்ந்து மாலை 7 மணிக்கு வைரவர் மடையும் நடைபெற்று விழா முடிவுறும். (இ—ந)

## பௌர்ணமி திருவிளக்கு பூஜை

கொழும்பு, மார்ச் 9

கொழும்பு ஜெயந்தி நகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் இன்று சனிக்கிழமை மாசிமக பௌர்ணமி திருவிளக்குப் பூஜை வெகு சிறப்பாக நடைபெறும்—

காலை 6 மணிக்கு ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாளுக்கும், ஸ்ரீ விசாலாட்சி அம்பாளுக்கும் ஸ்ரீ காளி அம்பாளுக்கும் ஸ்ரீ நடேசப் பெருமானுக்கும் ஸ்நபனாபிஷேகம் நடைபெறும்—

காலை 9 மணிக்கு வசந்த மண்டபத்தில் ஸ்ரீ வள்ளி தெய்வானை சமேத ஸ்ரீ சண்முகப் பெருமானுக்கு விசேட அபிஷேகம் நடைபெற்று சோட சோபதீபாலங்காரங்களுடன் ஸ்ரீ சண்முகார்ச்சனையும் இடம்பெறும் இது உச்சிக் காலப் பூஜையுடன் நிறைவு பெறும்—

மாலை 6 மணிக்கு திருவிளக்குப் பூஜை நடைபெற்று—

அதைத் தொடர்ந்து ஸ்ரீஇராஜராஜேஸ்வரி அம்பாள் எழுந்தருளி உள் வீதி வலம் வந்து பக்தர்களுக்கு இன்னருள் புரிவார்—

(இ)

---



## சிறப்பு மலர் வெளியீடு

அக்கரைப்பற்று கோட்டக்கல்வி அலுவலகத்தினால் நடத்தப்பட்ட கல்வி, சமய, கலாசார தினவிழாவை ஒட்டி சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்பட்டது—

சிறப்பு மலரின் முதற் பிரதியை விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அம்பாறை மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு எச் பீ விஜேசூரியவிடம், வளர்ந்தோர் கல்வி அதிகாரி அல்ஹாஜ் ஈ எல் எச் சுலைமாலெவ்வை வழங்குவதைப் படத்தில் காண்க.

மலர் ஆசிரியர் ஜனாப் எம் எஸ் ஹமீதும் படத்தில் காணப்படுகின்றார்,

நிந்தவூர் அல் அஷ்றக் மத்திய மகா வித்தியாலயத்தில் விழா நடைபெற்றது—

[படம்— ஏ எல் எம் சலீம்]

(ஐ—217)

---

ளது—

(ஐ).

## ஆசிரியர் பயிற்சி பூர்த்தி

நாத்தாண்டி மார்ச் 8

மாதம்பையில் அமைந்துள்ள உடற் கல்விப் பயிற்சி நிலையத்தில் மூன்று மாத காலப் பயிற்சியைப் பூர்த்தி செய்து கொண்ட ஆறூறு பயிற்சி ஆசிரியர்கள் அண்மையில் வெளியேறினர்.

இவர்களுக்குச் சா... வழங்கும் வைபவத்தில் வடமேல் மாகாண முதலமைச்சர் திரு காமினி ஜயவிக்கிரம பெரேரா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

---

# விளையாட்டு மைதானம் இல்லாத குறை நீங்குமா?

சுமார் 600 மாணவர்கள் கல்வி கற்கும் ஹரிஸ்பத்துவ கல்வி வட்டாரத்திலுள்ள குருந்துகொல்லை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு என விளையாடுவதற்கு பாடசாலையில் விளையாட்டு மைதானம் இல்லை,

இது நீண்ட காலமாக நிலவி வரும் ஒரு பெரும் குறைபாடாகும்.

இப்பாடசாலை விளையாட்டு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு அருகிலுள்ள சகோதர சிங்களப் பாடசாலைக்கு செல்ல வேண்டிய நிலை தொடர்ந்தும் நீடித்து வருகின்றது,

இதனால் இப்பாடசாலை மாணவர்கள் சொல்ல முடியாத பல இன்னல்களை அனுபவிக்கின்றனர்.

இவ்விடயம் சம்பந்தமாக பல முறை பலரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்ட போதும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதை மாணவர்கள் மனவருத்தத்துடன் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் மாணவர்கள் தாங்கள் அனுபவித்துவரும் இன்னல்களுக்கும் சிரமங்களுக்கும் முடிவே கிடைக்காதா? என சதா ஏங்கிக் கொண்டு மட்டுமன்றி, எதிர்பார்த்துக் கொண்டும் இருக்கின்றனர்.

எனவே இப்பாடசாலை மாணவர்களின் நீண்ட கால கனவை நிறைவேற்றிக் கொள்ள சம்பந்தப்பட்டவர்கள் இனிமேலாவது தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்,

